செ.வெ.எண்.312

நாள் 05.04.10

# பத்திரிகை செய்தி

## தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர் நல வாரியத்தின் நான்காவது கூட்டம்

## நாள் – 05.04.2010

*******

தமிழக அரசு அமைப்புசாரா தொழிலாளர்களின் பணி நிலைமைகளை முறைப்படுத்தவும் அவர்களின் நலனை மேம்படுத்தும் நோக்கத்துடனும் 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சட்டம் இயற்றியது. இச்சட்டத்தில் அமைப்புசாரா உடலுழைப்புத் தொழிலாளர்களுக்கு நலத்திட்டங்களை உருவாக்கவும் அவற்றை செயல்படுத்துவதற்கென நல வாரியத்தை அமைக்கவும் வழிவகை செய்யப்பட்டு 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியம் ஏற்படுத்தப்பட்டது. அதன்பின் கட்டுமானத் தொழிலாளர்கள், ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர்கள், சலவைத் தொழிலாளர்கள், முடிதிருத்துவோர், தையல் கலைஞர்கள், கைவினைத் தொழிலாளர்கள், பனைமரத் தொழிலாளர்கள், காலணி மற்றும் தோல்பொருள் உற்பத்தி செய்யும் தொழிலாளர்கள், ஓவியர்கள், பொற்கொல்லர்கள், மண்பாண்டத் தொழிலாளர்கள், வீட்டுப்பணியாளர்கள், கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெய்யும் தொழிலாளர்கள் உள்ளிட்ட பல்வேறு தொழில் செய்யும் தொழிலாளர்களுக்கென தனித்தனியாக நல வாரியங்கள் ஏற்படுத்தப்பட்டது. தற்போது 13.07.2009ல் தமிழ்நாடு விசைத்தறி நெசவாளர் நல வாரியமும் 29.01.2010ல் தமிழ்நாடு பாதையோர வணிகர்கள் மற்றும் கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் நல வாரியம் ஏற்படுத்தப்பட்டு மேற்கண்ட வாரியங்கள் அனைத்தும் தொழிலாளர் துறையின் கீழ் செயல்பட்டு வருகிறது.

இவ்வாரியங்களில் பதிவு செய்யும் அமைப்புசாரா தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர்கள் பயன்பெறும் வகையில் கீழ்க்கண்ட பல்வேறு நலத்திட்டங்களை தமிழக அரசு உருவாக்கி மிக சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

<u>நலதிட்டம் விவரம்.</u>

| | | |
|---|---|---|
| 1. | தனி நபர் விபத்து திட்டம் | (ரூ.) |
| | அ) விபத்து இறப்பு | 1,00,000/– |
| | ஆ) இரண்டு கைகள் இழப்பு, இரண்டு கால்கள் இழப்பு, ஒரு கை மற்றும் ஒரு கால் இழப்பு, இரண்டு கண்களும் முழுமையான இழப்பு | 1,00,000/– |
| | இ) ஒரு கை, ஒரு கால் அல்லது ஒரு கண் பார்வை இழப்பு | 50,000/– |
| | ஈ) நிலையான பகுதி ஊனம் | ஊனத்தின் தன்மைக்கேற்ப |
| 2. | இயற்கை மரண உதவி | 15,000/– |
| 3. | ஈமச்சடங்கு உதவி | 2,000/– |
| 4. | கல்வி உதவித் தொகை<br>அ) 10ம் வகுப்பு படிப்பதற்கு (பெண் குழந்தைகளுக்கு மட்டும்) | 1,000/– |
| | ஆ) 10ம் வகுப்பு தேர்ச்சி | 1,000/– |
| | இ) 11ம் வகுப்பு படிப்பதற்கு (பெண் குழந்தைகளுக்கு மட்டும்) | 1,000/– |
| | ஈ) 12ம் வகுப்பு படிப்பதற்கு (பெண் குழந்தைகளுக்கு மட்டும்) | 1,500/– |
| | உ) 12ம் வகுப்பு தேர்ச்சி | 1,500/– |
| | ஊ) முறையான பட்டப்படிப்பு<br>விடுதியில் தங்கிப்படித்தால் | 1,500/–<br>1,750/– |
| | எ) முறையான பட்டமேற்படிப்பு<br>விடுதியில் தங்கிப்படித்தால் | 2,000/–<br>3,000/– |
| | ஏ) தொழில் நுட்பப் பட்டப்படிப்பு<br>விடுதியில் தங்கிப்படித்தால் | 2,000/–<br>4,000/– |
| | ஐ) தொழில்நுட்பப் பட்டமேற்படிப்பு<br>விடுதியில் தங்கிப்படித்தால் | 4,000/–<br>6,000/– |
| | ஒ) ஐ.டி.ஐ. அல்லது பாலிடெக்னிக் படிப்பு<br>விடுதியில் தங்கிப்படித்தால் | 1,000/–<br>1,200/– |
| 5. | திருமண உதவித் தொகை | 2,000/– |
| 6. | மகப்பேறு உதவித் தொகை<br>(பெண் தொழிலாளர்களுக்கு மட்டும்) | 6,000/– |
| 7. | கண் கண்ணாடி வாங்கிட உதவித் தொகை | 500/–க்கு மிகாமல் |
| 8. | ஒய்வூதியம் | 400/– (மாதம் ஒன்றுக்கு) |

... செயல்படும் 15 நல வாரியங்களில் தமிழ்நாடு

## நலதிட்டம் விவரம்.

| | | | |
|---|---|---|---|
| 1. | தனி நபர் விபத்து திட்டம் | | (ரூ.) |
| | அ) விபத்து இறப்பு | | 1,00,000/– |
| | ஆ) இரண்டு கைகள் இழப்பு, இரண்டு கால்கள் இழப்பு, ஒரு கை மற்றும் ஒரு கால் இழப்பு, இரண்டு கண்களும் முழுமையான இழப்பு | | 1,00,000/– |
| | இ) ஒரு கை, ஒரு கால் அல்லது ஒரு கண் பார்வை இழப்பு | | 50,000/– |
| | ஈ) நிலையான பகுதி ஊனம் | | ஊனத்தின் தன்மைக்கேற்ப |
| 2. | இயற்கை மரண உதவி | | 15,000/– |
| 3. | ஈமச்சடங்கு உதவி | | 2,000/– |
| 4. | கல்வி உதவித் தொகை | | |
| | அ) | 10ம் வகுப்பு படிப்பதற்கு (பெண் குழந்தைகளுக்கு மட்டும்) | 1,000/– |
| | ஆ) | 10ம் வகுப்பு தேர்ச்சி | 1,000/– |
| | இ) | 11ம் வகுப்பு படிப்பதற்கு (பெண் குழந்தைகளுக்கு மட்டும்) | 1,000/– |
| | ஈ) | 12ம் வகுப்பு படிப்பதற்கு (பெண் குழந்தைகளுக்கு மட்டும்) | 1,500/– |
| | உ) | 12ம் வகுப்பு தேர்ச்சி | 1,500/– |
| | ஊ) | முறையான பட்டப்படிப்பு<br>விடுதியில் தங்கிப்படித்தால் | 1,500/–<br>1,750/– |
| | எ) | முறையான பட்டமேற்படிப்பு<br>விடுதியில் தங்கிப்படித்தால் | 2,000/–<br>3,000/– |
| | ஏ) | தொழில் நுட்பப் பட்டப்படிப்பு<br>விடுதியில் தங்கிப்படித்தால் | 2,000/–<br>4,000/– |
| | ஐ) | தொழில்நுட்பப் பட்டமேற்படிப்பு<br>விடுதியில் தங்கிப்படித்தால் | 4,000/–<br>6,000/– |
| | ஒ) | ஐ.டி.ஐ. அல்லது பாலிடெக்னிக் படிப்பு<br>விடுதியில் தங்கிப்படித்தால் | 1,000/–<br>1,200/– |
| 5. | திருமண உதவித் தொகை | | 2,000/– |
| 6. | மகப்பேறு உதவித் தொகை (பெண் தொழிலாளர்களுக்கு மட்டும்) | | 6,000/– |
| 7. | கண் கண்ணாடி வாங்கிட உதவித் தொகை | | 500/–க்கு மிகாமல் |
| 8. | ஓய்வூதியம் | | 400/– (மாதம் ஒன்றுக்கு) |

மேற்படி தொழிலாளர் துறையின் கீழ் செயல்படும் 15 நல வாரியங்களில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம், ஆட்டோ மற்றும் டாக்சி ஓட்டுநர்கள் நல வாரியம் தவிர பிற வாரியங்களில் மேற்படி நல திட்டங்களை செயல்படுத்த தமிழக அரசு தேவையான நிதியை வழங்கி வருகிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் ஆட்சிப் பொறுப்பேற்ற 13.5.2006

முதல் 15.03.2010 வரை இந்நல திட்டங்களை செயல்படுத்த 127 கோடி ரூபாய் தமிழக அரசால் அளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாரியங்களில் இதுவரை 23,76,871 தொழிலாளர்கள் உறுப்பினர்களாக பதிவு செய்துள்ளனர். 13.5.2006 முதல் 15.03.2010 வரை 16,12,270 தொழிலாளர்கள் பல்வேறு நல வாரியங்களின் கீழ் பதிவு செய்துள்ளனர். 13.5.2006 முதல் 15.03.2010 வரை பல்வேறு நல திட்டங்களின் கீழ் 6,11,668 தொழிலாளர்கள் ரூ.140,73,02,695/– அளவில் பயன்பெற்றுள்ளனர்.

தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர் நல வாரியத்தைப் பொறுத்தவரை 13.5.06 முதல் 15.03.2010 வரை 21,978 தொழிலாளர்கள் உறுப்பினராக பதிவு செய்துள்ளனர். மேற்படி காலத்தில் 4,991 .தொழிலாளர்கள் ரூ.96,02,324/– அளவில் நல திட்டங்களின் கீழ் பயன்பெற்றுள்ளனர்.

இன்று 5.04.2010 நடைபெற்ற தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர் நல வாரியத்தின் நான்காவது கூட்டத்திற்கு திரு அ.குமரி அனந்தன் அவர்கள் தலைமை தாங்கினார். இக்கூட்டத்தில் அரசு தரப்பு உறுப்பினர்களாகிய தொழிலாளர் ஆணையர் திரு ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., கூடுதல் தொழிலாளர் ஆணையர், நிதித் துறை துணைச் செயலர், மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு பனைப்பொருட்கள் மேம்பாட்டு வாரியம், தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர் நல வாரிய செயலாளர் திரு அ.ஞானசேகரன், திரு எஸ்.சிவலிங்கம், திரு இரா.தா.தங்கமாங்கனி, தொழிலாளர் பிரதிநிதிகள் திரு ஐ.அந்தோணி வியாகப்பன் (என்கிற) துரைசாமி, திரு சி.வரதராசு, திரு ஜே. ஜெயக்குமார்ரூபன் ஆகியோர் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் பனைமரத் தொழிலாளர்களின் நலனை மேம்படுத்த பல்வேறு கருத்துகள் எடுத்துரைக்கப்பட்டன.

3/3 **************

வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.

முதல் 15.03.2010 வரை இந்நல திட்டங்களை செயல்படுத்த 127 கோடி ரூபாய் தமிழக அரசால் அளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாரியங்களில் இதுவரை 23,76,871 தொழிலாளர்கள் உறுப்பினர்களாக பதிவு செய்துள்ளனர். 13.5.2006 முதல் 15.03.2010 வரை 16,12,270 தொழிலாளர்கள் பல்வேறு நல வாரியங்களின் கீழ் பதிவு செய்துள்ளனர். 13.5.2006 முதல் 15.03.2010 வரை பல்வேறு நல திட்டங்களின் கீழ் 6,11,668 தொழிலாளர்கள் ரூ.140,73,02,695/– அளவில் பயன்பெற்றுள்ளனர்.

தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர் நல வாரியத்தைப் பொறுத்தவரை 13.5.06 முதல் 15.03.2010 வரை 21,978 தொழிலாளர்கள் உறுப்பினராக பதிவு செய்துள்ளனர். மேற்படி காலத்தில் 4,991 .தொழிலாளர்கள் ரூ.96,02,324/– அளவில் நல திட்டங்களின் கீழ் பயன்பெற்றுள்ளனர்.

இன்று 5.04.2010 நடைபெற்ற தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர் நல வாரியத்தின் நான்காவது கூட்டத்திற்கு திரு அ.குமரி அனந்தன் அவர்கள் தலைமை தாங்கினார். இக்கூட்டத்தில் அரசு தரப்பு உறுப்பினர்களாகிய தொழிலாளர் ஆணையர் திரு ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., கூடுதல் தொழிலாளர் ஆணையர், நிதித் துறை துணைச் செயலர், மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு பனைப்பொருட்கள் மேம்பாட்டு வாரியம், தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர் நல வாரிய செயலாளர் திரு அ.ஞானசேகரன், திரு எஸ்.சிவலிங்கம், திரு இரா.தா.தங்கமாங்கனி, தொழிலாளர் பிரதிநிதிகள் திரு ஐ.அந்தோணி வியாகப்பன் (என்கிற) துரைசாமி, திரு சி.வரதராசு, திரு ஜே. ஜெயக்குமார்ரூபன் ஆகியோர் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் பனைமரத் தொழிலாளர்களின் நலனை மேம்படுத்த பல்வேறு கருத்துகள் எடுத்துரைக்கப்பட்டன.

3/3 ***************

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.